நகர் ஊரமைப்புத் துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், வையம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்: **241/2A, 241/2B** -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1: 400

இணையதள விண்ணப்ப எண்: SWP/IYXKE3CL/53466/2025

வ

மனைப்பிரிவின் எல்லை

நிலையில் உள்ள சாலை

குறிப்பு

மனைப்பிரிவின் பரப்பு : 19790.00 ச.மீ (4.89ஏக்கர்)

சாலை (ம) மூலை முடக்கு பரப்பு
நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பு : 14122.00 ச.மீ

கோரிய மனைகள் : 113

ஒதுக்கிய மனைகள் : 113 (EWS மனைகள் உட்பட)

EWS மனைகள் (64-73, 80-89, 105-109) : 25 (1469.00ச.மீ) (10.40%)

பொது ஒதுக்கீடுகள்: உள்ளாட்சிக்கு தான ஒப்படைப்பு செய்யப்பட்டவை.
தான ஆவணம் எண். 7866/2025, நாள்.15.09.2025

மனைப்பிரிவு சாலைகள் (ம) மூலை முடக்குகள்: 5668.00 சமீ

உள்ளாட்சி உபயோகம் : 74.02 ச.மீ (0.52%)

மின்வாரிய உபயோகம் : 73.46ச.மீ (0.52%)

பூங்கா : 1432.00 ச.மீ (10.14%)

கட்டிட வரம்பு:
அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 TNCDBR - 2019 விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள Planning Parameter-ன்படி நிபந்தனைக்கு உட்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மூலை முடக்கு:
சாலையின் அகலம் 12.0மீ. வரை 1.50மீ x 1.50மீ மற்றும் சாலையின் அகலம் 12.0மீ. மேல் 30.50மீ. வரை 4.50மீ x 4.50மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2)அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019 -ன் படிவங்களின் படியும், மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படியும் இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6" x 4" அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8) உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

9) பாசன வாய்க்கால், கால்வாய்கள் மற்றும் இயற்கை வடிகால் ஆகியவை தடைபடாமல் எவ்வித ஆக்கிரமிப்புமின்றியும் வெள்ளப்பெருக்கத்தினால் அருகிலுள்ள பகுதிகள் பாதிக்கப்படாமலும் இம்மனைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும்

10) நீர்நிலையின் எல்லையிலிருந்து 3.00மீட்டர் அகலம் வரை எவ்விதமான கட்டிடங்களும் அபிவிருத்தி மேற்கொள்ளக் கூடாது.

குறிப்பு: அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.இ.இ.(தி.மா) எண்: 160/2025

(இணையதள ஒப்புதல்)

(இ-சைன் செய்யப்பட்டது)
இணை இயக்குநர் (பொ)/உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



Signature valid
Signed by: Joint Director
Location: Tiruchirappalli
Date: 09.10.2025 09:16:18

Signature valid
Signed by: BDO
Location: Tiruchirappalli
Date: 01.10.2025 01:10:42